உ

சிவமயம்

உரும்பிராய்

# ஸ்ரீஞானவைரவசுவாமி

பேரில்



ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களால்

ஆக்கப்பட்டு

ஆண்டு தோறும் பாடப்பட்டு வந்த

தெய்வீகம் பொருந்திய

# திருவூஞ்சற் பாக்களும் பிறவும்

மஹாத்மா அச்சகம், ஏழாலை.

அன்பளிப்பு
திருமதி. க. இராமநாதன்.

உ

சிவமயம்

உரும்பிராய்

# ஞானவைரவசுவாமி திருவூஞ்சல்

ஆக்கியோன் :

ஆசுகவி கல்லடி க. வேலுப்பிள்ளை அவர்கள்

வெளியீடு :

செ. வைரவநாதக் குருக்கள்

*(பிரதம சிவாசாரியர்)*

ஞானவைரவர்கோயில்,

உரும்பிராய்.

1993

# பதிப்புரை

உரும்பிராய் ஞானவைரவ சுவாமி பேரிற் பன்னெடுங்காலமாகப் பாடப்பட்டுவந்த திருவூஞ்சற் பாடல்கள் சிதைந்து உருமாறிவிட்டதாகத் தர்மகர்த்தா சபையினர் 1992 ஆம் ஆண்டு தாம் வெளியிட்ட திருவூஞ்சற் பாமாலையிற் குறிப்பிட்டிருந்தனர். அறுபது ஆண்டுகள் தொன்மை வாய்ந்த - இதுவரை காலமும் திருவாதிரை நாளில் ஞான வைரவருக்குப் பாடப்பட்டு வந்த பாடல்கள் சிதையவுமில்லை, உருமாறவுமில்லை. எளிமையும், இனிமையும் சொற்சுருக்கமும் பொருட்செறிவும் கொண்ட பொன்னே போன்ற பாடல்கள் அப்பாடல்களாகும்.

அமரபதம் அடைந்த எமது மூத்த பரம்பரையினரான சிவஸ்ரீ பொ. கந்தையாக் குருக்கள் அவர்களது கனவிலே தோன்றிய அருள்மிகு ஞானவைரவசுவாமி கேட்டுக் கொண்டதற்கிணங்க இத் திருவூஞ்சற் பாடல்கள் ஆசுகவி - கல்லடி வேலுப்பிள்ளையாற் பாடுவிக்கப்பட்டது. எமது பரம்பரையினர் மூலம் நான் அறிந்து கொண்டது, திரு. வேலுப்பிள்ளை அவர்கள் ஞானவைரவ சுவாமி மீது அளவிடற்கரிய பக்தி கொண்டவர் என்பதாகும். அவரது குலதெய்வமும் வைரவரே ஆனதனால் அவரது பாடல்கள் உள்ளன்புடன் வெளிவந்தவையாக இருப்பது இயல்பேயாகும்.

1992 ஆம் ஆண்டு தர்மகர்த்தா சபையினரால் வெளியிடப்பட்ட புதிய பாடல்களில் 'வாழி' பகுதியில் 'செந்தண்மை அந்தணருக்கு' வாழி சொல்லப்பட்டுள்ளது. அந்தணர் என்பது பொதுவாகப் பிராமணர்களைக் குறிப்பது. எங்கள் பரம்பரையினர் வீரசைவ சிவாசார்ய பரம்பரையினராவர். அதற்கிணங்கவே திரு. வேலுப்பிள்ளை அவர்கள் பாடியுள்ளார்கள். ஒரு பாட்டு வேண்டும் என்பதற்காகவன்றிக் - கருத்துடன் - அக்கறையுடன் - விழிப்புடன் பாடப்பட்டவை. வேலுப்பிள்ளை அவர்களின் பாடல்கள்

என்பதற்கு அவர் வீரசைவம் வாழி! வீரவைரவர் வாழி! எனக் குறிப்பிட்டுள்ளதே தக்க சான்றாகும்.

அறுபது ஆண்டுகட்கு மேலாக ஆண்டவனுடன் உற வாடித் தெய்வீகம் பெற்றுவிட்டது இத்திருவூஞ்சற் பாடல். ஞானவைரவ சுவாமிக்குரிய பழைமையும் பாரம்பரியமும் கொண்ட பக்திமிகு திருவூஞ்சற் பாடலை உங்கள் அனை வருக்கும் நூல் வடிவிற் சமர்ப்பிக்கிறோம்.

இவ்வரிய பாடல்கள் இத் திருவாதிரை தினத்தில் எமது ஆலயத்தில் தொடர்ந்தும் பாடப்பட வேண்டியவை. இதனை உங்கள் கரங்களிற் சேர்ப்பதில் தோன்றாத் துணையாக நின்ற திருவருளை வியந்து போற்றிப் பணி கிறோம்.

எல்லாம் அவன் செயல்.

செ. வைரவநாதக் குருக்களும்
(பிரதம பூசகரும், பரம்பரை உரிமையாளரும்)
வீரசைவ சிவாசாரிய பரம்பரையினரும்

உ

சிவமயம்

# வாழ்த்துரை

உரும்பிராய் ஞானவைரவசுவாமி பேரில் பாடப் பெற்ற பழைமையான ஒரு திருவூஞ்சற் பதிகம் சென்ற வாரம் எனக்குக் கிடைத்தது. பழைமையும் அற்புதமும் நிறைந்த பாக்களால் இயைந்த இப்பதிகத்தைப் படித்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். சொல்லடுக்கும் வர்ணனையும் பக்திச் சுவையும் ஒருங்கிணைந்து செந்தமிழ்த் திறனைக் காட்டி நிற்கும் பழைமையும் மிளிர இப்பாக்கள் அமைந்துள்ளன.

'அண்ட சராசர அதிப' என்று தொடங்குவது எமது உள்ளத்தைத் தொடுகிறது.

"வண்டு மலர் நறவுகொண்டு கீதம் பாட"

என்று தொடங்கும் இரண்டாவது பாடலில் உரும்பிராய்ப் பதியின் சோலைவளம் நயமுடன் காட்டப்படுகிறது. ஊர் வளம், பனையல் வளம், திருவுருவவளம், இசைவளம், பக்தர்கள் பிரலாபவளன் ஆகியவற்றை அடுக்கடுக்காகக் கூறுவதும், பாடல்களின் இறுதியடியில் " வயிரவதுரையே " என்று விளித்துப் பாடுவதும் ஒரு பழைமையான மரபை எடுத்துக் காட்டுகிறது. படிக்கப் படிக்க அன்பர்களின் உள்ளம் என்னும் ஊஞ்சலில் ஆடுகின்றார் வைரவப்பெருமான் என்பதை அநுபவித்து உணரமுடியும். எனவே பெருமானுக்கு இவ்வூஞ்சற்பாவை வெளியிட்டு ஞானப்பணியாற்றும் அனைவருக்கும் எனது வாழ்த்தும் வணக்கமும் உரித்தாகுக.

தங்கம்மா அப்பாக்குட்டி
துர்க்காபுர மகளிர் இல்லம்
தெல்லிப்பழை.

உ

# மதிப்புரை

செல்வி சுசீலா சாரங்கபாணி B. A. (Hons) Dip. in - Education
(ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையின் பேர்த்தி)
ஆசிரியை, இந்துக் கல்லூரி, உரும்பிராய்.

எமது சமயத்தின் சிறப்பம்சம் அதன் தொன்மையாகும். எங்கள் ஞானவைரவசுவாமி தோன்றிய காலம் முதல் வீரசைவ சிவாசாரிய பரம்பரையினால் பூசை செய்யப்பட்டு வருகிறார். வீரசைவ சிவாசாரிய பரம்பரையைச் சேர்ந்த சிவபதம் அடைந்த குருக்கள் ஐயாவை உரும்பிராய் மக்களில் பெரும்பான்மையோர் அறிவர்.

நான் கோவிலுக்குச் செல்லும் சமயங்களில் எல்லாம் அவர் என்னிடம் கூறும் செய்தி 1935-ம் ஆண்டில் வைரவசுவாமி தனது கனவிலே தோன்றி, தனக்கொரு திருவூஞ்சற்பா வேண்டும் என்று கேட்டதும் அதற்கிணங்கத்தான் எனது பேரனாரான ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையிடம் சென்று கேட்டதற்கிணங்க அவர் திருவூஞ்சற்பாவினைப் பாடித் தந்ததும் என்பதாகும். அந்தப் பாடல் அரங்கேற்றம், அலங்காரத் திருவிழாவின் போதே நடைபெற வேண்டும் என்பதால் திருவாதிரை அன்று அதனை அரங்கேற்றியதாகவும் அன்று முதல் திருவாதிரை நாளில் எமது அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவசுவாமிக்கு அந்தப் பாடல் பாடப்பட்டு வருகிறது என்பதும் குருக்கள் ஐயா மூலம் நான் அறிந்த செய்தியாகும்.

1992- ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூலின் பதிப்புரையில் ஸ்ரீ ஞானவைரவசுவாமி பேரில் பன்னெடுங் காலமாகவுள்ள திருவூஞ்சற் பாடல்கள் கையேடாகையால் சிதைவுற்று உருமாறிவிட்டது என்று கூறப்படுவது பொருத்தமற்ற கூற்றாகும்.

கையேட்டிலுள்ள திருஊஞ்சற் பாடல்களின் ஒரு அட்சரம் தானும் சிதைவுறவில்லை. மாறாக பேரறிஞர் பலரின் அபிப்பிராயப்படி வெற்றுச்சொல் என்பதே இல்லாத பக்திமயமான பொருள் பொதிந்த இறைவனிடம் ஆழ்ந்து இலயித்துப் பாடப்பட்ட பாடல்களே ஆகும்.

பக்திச் சுவை மிக்க பழைமை வாய்ந்த ஊஞ்சற் பாக்களை அறிந்திராத நிலையில் புதிய ஊஞ்சற் பாக்கள் அடங்கிய நூலின் முகற் பிரதியைப் பெற்றுக் கொண்டவரான வைத்திய கலாநிதி பொ. சிவபாலன் அவர்கள் தான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தமாக இந்நூலை வெளியிட உதவிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாடல்களை ஸ்ரீஞானவைரவசுவாமியின் பூசகர்களான சிவாசாரிய பரம்பரையினர் வெளியிடுகின்றனர். அவர்களது அந்த ஆக்கபூர்வமான, சிந்தனைத் தெளிவுடைய முயற்சிக்கு என் சார்பிலும், ஸ்ரீஞானவைரவசுவாமி சார்பிலும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன.

# எனது அநுபவம்

பண்ணிசைமாமணி
திருமதி பூமணி நடராசா (உரும்பிராய்)

எமது அருள்மிகு தெய்வமும் உரும்பிராய் காவல் தெய்வமுமாகிய ஸ்ரீஞானவைரவசுவாமியின் அளப்பரிய அருளை நம் உரும்பிராய் மக்கள் அனைவரும் அறிவர்.

கடந்த பத்தாண்டுகளாகத் திருவாதிரை நன்னாளிற் காலம் சென்ற திரு. இராச முத்தையா அவர்கள் என்னிடம் திருவூஞ்சற் பாடல்கள் அடங்கிய கொப்பியைக் கொண்டுவந்து தருவதும் நான் அதனைப் பாடுவதும் வழக்கம்.

கடந்த வருடம் ஊர்மக்கள் பலரின் வேண்டுகோளுக் கிணங்க ஸ்ரீஞானவைரவசுவாமி கோவிலில் இலவசமாகப் பண்ணிசை வகுப்பொன்றை நடத்த ஆரம்பித்தேன். அது தடுக்கப்பட்டது. அந்த ஆண்டு திருவாதிரை நாளிற் திருவூஞ்சல் பாட நான் அழைக்கப்படவில்லை.

இப்படியிருக்கும்போது இந்த ஆண்டு புதியதொரு ஊஞ்சற்பா பாடப்பட்டு அரங்கேற்றப்பட்டதாக அறிந்தேன். இது மேலும் பெரிய அதிர்ச்சியை எனக்கு ஏற்படுத்தியது. அந்தப் பக்திமிகு பழைய பாடலுக்கு என்ன நடந்தது என நான் எண்ணியிருந்த வேளையில் வைரவ அன்பர் ஒருவர் என்னிடம் வந்து இதுவரை ஞானவைரவரில் நீங்கள் பாடிய திருவூஞ்சற்பா இதுவா? எனக் கேட்டார். எனது மெய் சிலிர்த்தது.

நான் இதுவரை பாடிய இத்திருவூஞ்சற்பா மிகவும் பக்தியானது. ஆழமானது. தானகதி தானே வந்தமையும் தன்மையது என்பது எனது பணிவான அபிப்பிராயமாகும்.

உ

உரும்பிராய்

## இந்துசமய அபிவிருத்திச் சங்கத் தலைவரின்

# மதிப்புரை

எமது சைவ சமயத்துக்கு மிக்க பெருமையைத் தருவது அதன் தொன்மையேயாகும். பழமை பேணவும் போற்றவும் படவேண்டிய ஒன்று. திரு கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள் ஒரு புகழ்பூத்த புலவர். அவர் பல்லாண்டுகளுக்கு முன் ஞானவைரவர்சுவாமி மேல் பாடிய ஊஞ்சற் பாடல்களைக் கண்ணுற்றேன். அவை வியத்தகு சிறப்புடன் மிளிர்வது கண்டின்புற்றேன். ஞானவைரவர்சுவாமிக்கு உவந்த அரிய இனிய நறுமலர்கள் அவை என்பது எனது கருத்து.

இந்து சமய அபிவிருத்திச் சங்கம்,
உரும்பிராய்.

செ. ஐயாத்துரை
தலைவர்

உ

## உரும்பிராய் பறுபதவர்த்தினி அம்மன் கோயில் பரிபாலன சபைத் தலைவர்

அவர்களின்

# கருத்துரை

எமது ஞானவைரவ சுவாமி மீது பாடப்பட்ட தொன்மையான பாடலைக் கண்டபோது வியப்பேற்பட்டது. நமது ஞானவைரவப் பெருமானின் தொன்மைக்குச் சான்று கூறுவதாக உள்ள இப்பாடல்கள், அன்பும் பக்தியும் மிகுந்தவையாகவும் காணப்படுகின்றன. புகழ் மிகுந்த, நினைத்த மாத்திரத்தில் பாடும் தன்மை பெற்ற ஆசுகவி - கல்லடி வேலுப்பிள்ளையினால் பாடப்பட்டமை அதன் காரணமாகலாம். இப் பாடல்கள் காலம் காலமாகப் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவை என்பது எனது கருத்தாகும்.

உரும்பிராய்.

சி. பஞ்சலிங்கம்

உ

உரும்பிராய்

ஒடையம்பதி

கற்பக விநாயகர் ஆலய

# பரிபாலன சபைத் தலைவர்

அவர்களின்

## கருத்துரை

ஆசுகவியால் அகில யாழ் எங்கும் வீசு புகழடைந்த திரு. வேலுப்பிள்ளையின் தொன்மையான வைரவர் திருஊஞ்சற்பாட்டை நன்கு பக்தியுடன் வாசித்தேன். இசையும் பக்திச்சுவையும் நிறைந்து, உரும்பிராயின் எழில் வளமும் சைவவளமும் திரம்பக் காட்டப்பட்டுள்ள பாடல்களை நூல்வடிவில் வெளியிடும் முயற்சியை உளமாரப் பாராட்டுகிறேன்.

29 - 12 - 1992. வீ. ஆறுமுகம்

உ

சிதம்பர சுப்பிரமணியசுவாமி கோயில்

# பரிபாலன சபைத் தலைவர்

அவர்களின்

## கருத்துரை

அமரர் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களால் பாடப்பெற்ற வைரவர் திருவூஞ்சல் பாக்களை அச்சிட்டு வெளியிட எடுக்கும் முயற்சியைப் பாராட்டுகின்றேன்.

உரும்பிராய். க. நாகராசா

29 - 12 - 1992.

சிவமயம்

உரும்பிராய்

# ஞானவைரவசுவாமி
# பேரில் பாடிய
# திருவூஞ்சற் பாக்களும் பிறவும்

அண்டசரா சரவதிப ஆதி நாத
ஆனைகண நாதனருந் துணைவ சோதி
கொண்டவிதா தாசிரங்கொய் கொற்றா தேவ
கோதைபத்ர காளிமண வாளா வெம்மை
அண்டுபிணி யொழிக்குமத்தா கழகம் பல்லா
லயமதியா வணமருவு முரும்பை யூரில்
துண்டியுறை வடுகேசா ஆடீரூஞ்சல்
சுவாமிவயி ரவதுரையே ஆடீரூஞ்சல்.

வண்டுமலர் நறவுகொண்டு கீதம் பாட
மாவருக்கை கமுகுதென்னை வயங்கு [வாழைத்
தண்டலைசூ ழக்கோங்கு பன்னீர் வெட்சி
சண்பகம்வா சங்கமழச் சங்கு பேரி
அண்டமதிர் தரவார்ப்பத் தேவ மாதர்
ஆடநட மடியர்பணி யுரும்பை யூரில்
துண்டியுறை வடுகேசா ஆடீரூஞ்சல்
சுவாமிவயி ரவதுரையே ஆடீரூஞ்சல்.

பண்குலவு முடைமாலை விடுத்த காயா
பணிகார வடைமாலை தரித்த தூயா
அண்டுமடி யவர்பிணிதீர் தாள்சு காயா
அழகுபல குலவுரும்பை யூரி னோர்பால்

கண்டலம்போ னதைப்புளின மென்றெ னிக்கா
கம்பதூங்கிச் சிறையொதுக்குங் காட்சி மேய
துண்டியுறை வடுகேசா ஆடீரூஞ்சல்
சுவாமிவயி ரவதுரையே ஆடீரூஞ்சல்.

சண்டகபா லஞ்சூலம் ரக்த நேத்ரம்
தடியுமனற் சடையுரநிர் வாணங் காணக்
கண்டனக்கே ரண்டுபத்ர காளி யோடு
கரியநா யேறிநடம் புரிந்து பூத
ஒண்கணஞ்சூ ழக்காவற் கடவு ளான
உத்தமநித் தியநாதா உரும்பை யூரில்
துண்டியுறை வடுகேசா ஆடீரூஞ்சல்
சுவாமிவயி ரவதுரையே ஆடீரூஞ்சல்.

விண்டலமா ரிரவிமதி தம்ப மாக
விகிர்தனித பிரணவமே விட்ட மாக
பண்குலவு பலகலைகள் கயிற தாகப்
பனியுமுயர் நான்மறையே பலகை யாக
திண்டிறலார் சுரமாதர் வடந்தொட் டாட்டத்
தேசுதவழ் சோலை திகழ் உரும்பையூரில்
துண்டியுறை வடுகேசா ஆடீரூஞ்சல்
சுவாமிவயி ரவதுரையே ஆடீரூஞ்சல்.

தண்டமிழ்வா ணர்கள்சூ ழச்சங் கம்பேரி
தவில் துடிபுல் லாங்குழல் யாழ்சத்தமிறக்
கொண்டல்பனி காட்டமயி லதுகண் டாடக்
கூதிர்க்கா லத்தடியர் குரவை காட்ட
சண்டனைனப் பஞ்சவா லாத்தித் தீபந்
தயங்கியொளி தனைக் காட்ட உரும்பை
துண்டியுறை வடுகேசா ஆடீரூஞ்சல் [யூரில்
சுவாமிவயி ரவதுரையே ஆடீரூஞ்சல்.

எண்டிசையு மிருந்தடியார் கிருபா வள்ள
லென்னுனது சந்நிதியைத் தேடி வந்து
கொண்டபிணித் துயர்கூறிக் கண்ணீர் மல்க
குறைநீக்கி யருள்புரியுங் குமர நாதா
தொண்டிரைவா ரியிற்சேக்கை புரியாற் றாருந்
திருமாற்கும் மருமகனே உரும்பை யூரில்
துண்டியுறை வடுகேசா ஆடீருஞ்சல்
சுவாமிவயி ரவதுரையே ஆடீருஞ்சல்.

அண்டர்பணி யும்பரனே ஆடீருஞ்சல்
அமலபுர முடையவரே ஆடீருஞ்சல்
பண்டுமறை துதிபதியே ஆடீருஞ்சல்
பற்றுமைங் கைப் பரற்கிளையோய் ஆடீருஞ்சல்
கொண்டல்வணன் மருகவனே ஆடீருஞ்சல்
குமரனொரு சிரமரிந்தோய் ஆடீருஞ்சல்
துண்டியுறை வடுகேசா ஆடீருஞ்சல்
சுவாமிவயி ரவதுரையே ஆடீருஞ்சல்.

தண்குமுத மலர்ப்பாதா ஆடீருஞ்சல்
தனிதமுடு வற்படையா ஆடீருஞ்சல்
வண்குலவு பரஞ்சுடரே ஆடீருஞ்சல்
மறைபுகழுந் திறனுடையாய் ஆடீருஞ்சல்
திண்டிறற்சூ லப்படையா ஆடீருஞ்சல்
தீரபத்ர காளியன்பா ஆடீருஞ்சல்
துண்டியுறை வடுகேசா ஆடீருஞ்சல்
சுவாமிவயி ரவதுரையே ஆடீருஞ்சல்.

உருத்திரநன் மணியோடு நீறும் வாழி
உலகெங்கும் வீரசைவ மோங்கி வாழி
திருத்திகழுஞ் சிவனடியார் சேர்ந்து வாழி
தேவரனை பாவலரும் சிறந்து வாழி

மருத்தனைய மழைபெய்து மண்ணும் வாழி
மாவுரும்பை வாழ்மக்கள் மன்னி வாழி
கருத்தீருந் துண்டியுறை கவினுந் தேவன்
காரிவயி ரவருஞ்சல் வாழி வாழி.

## எச்சரீக்கை

தேனார் வடை மாலா புனை தேவா எச்ச ரீக்கை
செய்யா ரழற் சடையா சூலப் படையா எச்ச ரீக்கை

போதா மலர்ப் பாதா பூத நாதா எச்ச ரீக்கை
புகழார் துண்டிப் பதிவாயுறை புனிதா எச்ச ரீக்கை

சரகு லக பால கர கந்தா எச்ச ரீக்கை
கதியார் துண்டிப் பதியார் கிர்பைக் கடலே எச்ச ரீக்கை

நித்தா பத்தர் அத்தா வன்பர் தத்தா எச்ச ரீக்கை
நின்பால் வரு மன்பர்க் கருள் நிமலா எச்ச ரீக்கை

அடியார் பிணி கெடவே யருள் அமலா எச்ச ரீக்கை
ஆனா திரு வாணா செக மானா யெச்ச ரீக்கை

துதியார் துண்டிப் பதிகால் பழஞ் சுடரே எச்ச ரீக்கை
தூயா கனி வாயா எஞ்ச காயா எச்ச ரீக்கை.

அத்தா மல முத்தா பல சித்தா எச்ச ரீக்கை
அழகார் துண்டிப் பதி மேவிய ஐயா எச்ச ரீக்கை

ஈசா வடு கேசா துண்டி வாசா எச்ச ரீக்கை
எமையாள் பரம் பொருளே யருள் இறையே எச்ச ரீக்கை.

06 DEC 2019
3440

# ஆசுகவி கல்லடி க. வேலுப்பிள்ளை

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தோன்றி 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை வாழ்ந்து சிறந்த ஈழத்துத் தமிழ் அறிஞர்களில் ஒருவரான ஆசுகவி கல்லடி க. வேலுப்பிள்ளை அவர்கள் மிகவும பிரபல்யம் வாய்ந்தவர் ஆவர். பிறந்தகம் வயாவிளான்; புக்ககம் உரும்பிராய்.

குத்தலாகவும் கிண்டலாகவும் அதேவேளை காத்திரமான கருத்துக்களை வெளியிடும் முகமாகவும் எழுதுவதில், பேசுவதில், கவிகள் புனைவதில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி இவர் விளங்கினார். இவரது கண்டன உரைகள், எழுத்துக்கள், பாடல்கள் வாசகர்களின் நெஞ்சங்களை ஊடுருவத்தக்கவை.

'கண்டனங்கள் கிறக் கல்லடியான்' என்று இவரது வீரத்தை அறிஞர்கள் பாராட்டி இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணை வேந்தராக விளங்கிய பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள்,

''ஈழத்துத் தமிழ்ப் பேரறிஞரிலே கவிதை, உரைநடை, பத்திரிகை கண்டனம, கட்டுரை, வரலாற்று ஆராய்ச்சி முதலிய பலதுறைகளிலே முன்னணியில் வைத்துக் கணிக்கப்பட வேண்டியவர் கல்லடி வேலுப்பிள்ளை''.

என்று தமது வாழ்த்துரை ஒன்றிற் குறிப்பிட்டுள்ளார். 1902இல் 'சுதேசநாட்டியம்' என்ற பிரபலம் வாய்ந்த பத்திரிகையை ஆரம்பித்து அதன் வளர்ச்சிக்கு முப்பது வருடங்களாக உழைத்ததைப் பத்திரிகை உலகம் இன்றும் பாராட்டுகின்றது.

காலத்துக்குக் காலம் ஆசுகவி வேலுப்பிள்ளை அவர்கள் இறைவன்மீது பாடிய தோத்திரப் பாடல்கள் படிப்பவர்களது நெஞ்சங்களை உருக்கும் தன்மை வாய்ந்தவை என்பது விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

இவர் எழுதி வெளிவந்த நூல்களில் ''யாழ்ப்பாண வைபவ கௌமுதி'' எனனும் பெயர் கொண்ட நூலும் ஒன்றாகும். இந்நூல் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களது பேராற்றலைக் கிரிதீபமென விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் (உரும்பிராய்)